# பாடம் 19: மனித உடலேற்பு (1)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், நாடுகடத்தல் அனுபவத்தின் பொழுதும் அதற்கு முன்பும் இஸ்ரயேலுக்கு கடவுள் அனுப்பிய இறைவாக்கினர்கள் குறித்து நாம் கற்றோம்.இஸ்ரயேல் மக்கள் தங்களின் பாவத்திலிருந்து மனந்திருந்தக் கோருவதற்காக இந்த இறைவாக்கினர்கள் அழைக்கப்பட்டனர். தமது மக்களை மீட்க ஒருநாள் மீட்பரை அனுப்புகின்ற கடவுளின் வாக்குறுதியைக் கொண்டு சேர்க்கவும் அவர்கள் அழைக்கப்பட்டனர். இந்த பாடத்தில், வாக்களிக்கப்பட்ட மீட்பரின் வருகையைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. இஸ்ரயேல் மக்கள் ‘‘புதிய தாவீதாகிய’’ இந்த மெசியாவை (‘‘திருப்பொழிவு பெற்றவர்’’ என்பது பொருள்) எதிர்நோக்கக் கற்பிக்கப்பட்டனர். குறித்த நேரத்தில், கடவுள் மெசியாவை அனுப்பினார். அவர் தமது சொந்த மகனை, நித்திய வாக்கானவரை, தூய திரித்துவத்தின் இரண்டாம் ஆளை, மனிதராகுமாறு அனுப்பினார். கடவுள் மனிதரான இந்த நிகழ்வு உடலேற்பு என்று அறியப்படுகிறது, உடலேற்பு என்பதற்கு ‘‘சதையாக மாறுதல்’’ என்பது பொருள். தூய திரித்துவத்தின் இரண்டாம் ஆள், அதாவது, நித்திய வாக்கானவர், தமது இறை இயல்போடே இந்த உலகில் மனித ஆண் குழந்தையாகப் பிறந்தார்.

அவர் முழு கடவுளாகவும் முழு மனிதராகவும் இருந்தார் (மேலும் இருக்கிறார்). கடவுளின் மகன் மனித உடலையும் ஆன்மாவையும் ஏற்றுத் தமது இறை ஆளில் ஒன்றிக்கச் செய்தார். கடவுளாக இருக்கிறதை நிறுத்தாமலே, அதே நேரத்தில் பேறுநிறை திரித்துவத்தின் இரண்டாம் ஆள் மனிதரானார். கிறிஸ்துவின் இறை இயல்பு நித்தியம் அனைத்தில் இருந்தும் இருக்கிறது. அவரது மனித இயல்பு மட்டுமே உடலேற்பில் தொடங்கியது.

2. இயேசுவின் பிறப்பும் பிறப்பிடமும் அவை உண்மையாக மாறுவதற்கு பல நூற்றாண்டுகள் முன்பே இறைவாக்காக உரைக்கப்பட்டன. இந்த விடயங்கள் நிகழும் என்று வாக்களித்தார், அவர் வாக்களித்த விதத்திலே அவை நடந்தன. கடவுள் எப்பொழுதும் தமது வார்த்தையைக் காப்பாற்றினார்.

3. நூற்றுக்கணக்கான முற்கால இறைவாக்குகள், இஸ்ரயேலுக்கும் உலகிற்கும் ஒருநாள் அமைதியைக் கொணரும் ஒரு மெசியா (கிறிஸ்து) பற்றிப் பேசின (எடுத்துக்காட்டாக, எசாயா 52:13 - 53:12 மற்றும் செக்கரியா 12-14). இயேசுவின் வருகைக்கு ஏறத்தாழ 740 ஆண்டுகள் முன்பே, மெசியா ஒரு குழந்தையாகப் பிறப்பார் என்று எசாயா வழியாக கடவுள் கூறினார்.

*எசாயா 9:6-7:* ‘‘ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார், ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார், ஆட்சிப்பொறுப்பு அவரது தோள்மேல் இருக்கும்; அவரது பெயரோ, ‘வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், நித்தியத் தந்தை, அமைதியின் இளவரசர்’ என்று வழங்கப்படும். அவரது ஆட்சியின் உயர்வுக்கும் அமைதி நிலவும் அவரது அரசின் வளர்ச்சிக்கும் முடிவு இராது; தாவீதின் அரியணையில் அமர்ந்து அவரது அரசை நிலைநாட்டுவார்; நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிபுரிந்து அதை நிலைபெயராது உறுதிப்படுத்துவார்.’’

*மீக்கா 5:2:* ‘‘நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே, யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய். ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடம் இருந்தே வருவார்; அவர் தோன்றும் வழிமரபு ஊழிஊழிக் காலமாய் உள்ளதாகும்.’’

4. லூக்கா 1:26-38ல் உள்ள கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு நிகழ்வை வாசிக்கவும். அந்தக் கதையை மாணவர்களுக்கு விவரிக்கவும்.

5. ‘‘அறிவிப்பு’’ என்னும் பதம் ‘‘அறிவித்தல்’’ என்கின்ற அதே பொருளைக் கொண்டுள்ளது. இயேசுவின் பிறப்புக்கு ஒன்பது மாதங்களுக்கு முன்பு, தூய ஆவியார் வழியாக கடவுளின் மகனின் கருவாதலைக் கன்னி மரியாவுக்கு அறிவிக்க வானதூதர் கபிரியேல் அனுப்பப்பட்டார்.

6. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 25ந்தேதி நாம் இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவதால், கிறிஸ்து பிறப்பு பெருவிழாவுக்குச் சரியாக ஒன்பது மாதங்கள் முன்பாக, ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 25ந்தேதி கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது.

7. கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு கதையை வாசிக்கும் பொழுது, ஏறத்தாழ 15 வயதே ஆன இளம் கன்னி மரியா, தமது வாழ்வுக்கான கடவுளின் திட்டத்தை முழு இதயத்தோடு ஏற்கத் தயாராக இருந்தார் என்பதை நீங்கள் காணலாம். இத்திட்டம் ஏற்பதற்கு எளிதானது அன்று. ஓர் இளஞ்சிறுமி திருமணத்திற்கு முன்பே கருவுற்றால் நாசரேத் என்ற சிறிய ஊரின் மக்கள் என்ன சொல்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவளது கருவுறல் அந்த கிராமம் முழுவதற்கும் புரளிக்கானத் தலைப்பாகி, அவளது குடும்பத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும். அவளை மண ஒப்பந்தம் செய்த மனிதரான யோசேப்பின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படும். தொடக்கத்தில் யோசேப்பு மண ஒப்பந்தத்தை முறித்துவிட நினைத்தார். ஆனால் மரியாவைப் போன்றே, அவரும் கடவுளின் விருப்பத்துக்குக் கீழ்ப்படியத் தயாராக இருந்தார் (மத்தேயு 1:18-21ஐ வாசிக்கவும்).

8. மரியாவிடம் இருந்து நாம் மூன்று நடைமுறை பாடங்களைக் கற்கலாம்:
அ) கடவுளால் பயன்படுத்தப்படத் தயாராக இருங்கள். நாசரேத்தின் திருமணமாகாத ஓர் இளம்பெண்ணாக, மரியா சமூகத்தில் மிகவும் தாழ்நிலையில் இருந்தார், ஆனால் கடவுள் அதைப் பற்றி அக்களை கொள்ளவில்லை. கடவுள் மிகவும் தாழ்ச்சியுள்ள மக்களைத் தமது திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுத்துகிறார்.
ஆ) உங்கள் விசுவாசத்தை கடவுளில் வையுங்கள். திருமுழுக்கு யோவானின் பிறப்பு குறித்த கபிரியேலின் அறிவிப்பை நம்ப மறுத்த செக்கரியாவுக்கு முரணாக, மரியா ‘‘ஆண்டவரை நம்பியவர்’’ (லூக்கா 1:45) என்று அவரது உறவினர் எலிசபெத்து விவரிக்கிறார்.
இ) ஆண்டவரின் ஊழியராக (அடிமையாக) உங்கள் வாழ்வை வாழுங்கள். மரியா இறுதியாக கபிரியேலுக்கு வலிமையான வார்த்தைகளால் பதிலிறுத்தார்: ‘‘இதோ, ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்’’ (லூக் 1:38). கடவுளால் பயன்படுத்தப்பட மரியா அளித்த இசைவின் வழியாக, மீட்பர் இவ்வுலகிற்கு வந்தது கடவுளின் அன்பின் முழுமையை நமக்கு காட்டுகிறது.

9. கடவுள் மனிதராக வருவதே உடலேற்பு என அழைக்கப்படுகிறது. தாம் இந்த பிரபஞ்சத்தை படைக்கும் முன்பே, ஒருநாள் மனித ஆளாக வருவதற்கு, மனிதர்கள் நடுவே தங்குவதற்கு கடவுள் திட்டமிட்டார். தம்மை மனிதர்களோடு ஒன்றிக்கச் செய்து, தூய திரித்துவத்தின் ஒன்றிப்பின் நிறைவான அன்பில் நாம் பங்குபெறச் செய்ய முன்னதாகவே திட்டமிட்டார்.

10. மனிதகுலத்தைப் படைத்ததில், மனிதர்களும் நிறைவாகத் தம்மைத் திரும்ப அன்பு செய்ய வேண்டுமென்றும் கடவுள் விரும்புகிறார், அது அவருக்குத் தேவை என்பதால் அன்று, மாறாக நமக்குச் சிறப்பானதை அவர் விரும்புகிறார். (மற்றபடி, கடவுளின் அன்பு ஏற்கெனவே அவரிலே முழுமையாக இருக்கிறது, மேலும் மற்றவர்கள் அவரை அன்பு செய்வது அவருக்குத் தேவை அன்று.) எனினும், தன்னை வழங்கும் அதே அன்பால் அவரை நிறைவாக அன்பு செய்வதற்கு மனிதர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி, தூய திரித்துவத்தின் உறுப்பினர் ஒரு மனிதராவதும், பேரன்போடு அன்பு செய்யும் கடவுளில் மனிதகுலத்தைப் பிரதிபலிப்பதும் ஆகும். நம் சொந்த திறனால், கடவுள் நம்மை அன்பு செய்கின்றப் பேரன்பால் மனிதர்கள் அவரை அன்பு செய்ய இயலாது.

11. நித்திய உலகத்திற்காக, தூய திரித்துவத்தின் இரண்டாம் ஆள், மனிதராக வருவதற்கு, அவர் தமது நித்திய மாட்சியை இழக்க வேண்டியிருந்தது. மனிதராகும் தாழ்ச்சியில், படைப்பாளர் படைப்புயிரியாக மாறத் தயாராயிருக்க வேண்டும். மனிதகுலம் அத்தகைய அன்பை விரும்பவில்லை என்றாலும், நமக்கான அவரது பேரன்பால் கடவுள் இதைச் செய்ய விரும்பினார்.